உ

பதிவு எண்—M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்ருண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனர்.

5-கிளை குருகுலம், மாம்பாக்கம்; நந்தன, பங்குனி; ௨0—3—53 தளிர் 25

குருகுலத்தின் குறிக்கோள் :

*பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது*

## மறத்திற்கும் அன்பு

உலகம் தெளிய வேண்டிய சிறந்த உண்மை இது. அறச்செயலை விட மறச் செயலே நாட்டில் மிகுந்துள்ளது. ஆதலால், நிரம்பத் திருத்தம் தேவை யுள்ளது.

திருத்தத்தில் இருவகை உண்டு; ஒன்று வன்பினல் ஒறுத்தல், மற்ருென்று அன்பினல் திருத்தல்! இவை இரண்டில், எளியதும் இனியதும் பயன் மிகுதி செய்வதும் அன்பினல் திருத்தலேயாம். "ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்" தான் என்று ஆசிரியர் அம் முறையை ஒதுக்கி விட்டமை இங்கே நினைவு கூரப்படும்.

அன்பினல் திருத்தம் செய்யும்போது சிறிது ஒறுத்தல் செய்ய வேண்டுமானலும், அதனையும் அன்பினல் செய்யும்போதுதான் ஒரு சிறிது பயன் செய்யும். இல்லையானல், தீமைகள் ஒன்றுக்குப் பன்மடங்காய்ப் பெருகுமே யல்லது குறைதலைக் காணல் இயலாது.

பெருந்தன்மையும் அன்புள்ளமும் வாய்ந்த சான்ருேர்களே இங்ஙனம் உலகைத் திருத்துதற்கு உரியோர். மற்றவர்க்கெல்லாம் வன்பியல்பு முன்வந்து கெடுத்து விடும்.

இல்வாழ்க்கையில் இருப்போர்க்கு அன்பே அணிகலம்; நாட்டு மக்களிடத்திலும் அண்டை அயலில் இருப்பவரிடத்திலும் சுற்றத்தாரிடத்திலும் அன்புருவமாக நடந்துகொள்ளும் பொறுப்பு மிகுதி! துறவு நிலையில் உள்ளவர்க்கே அன்பினல் திருத்தல் இயலும் என்று தவருகக் கருதிக்கொள்ளலாகாது.

இல்வாழ்க்கை நிலையில் இருப்போர், தன்னலமும் உடையராதலால் அவரெல்லாரும் அன்பினல் மறத்தை வெல்லுதல் மாட்டாமை, என்று கருதுதலும் தவருகும். தீமைக்குத் தீமை, நன்மைக்கு நன்மை என்று துணியும் முறைமையும் தவருகும்.

'இல்வாழ்வோரும் அன்பினல் தீமையை வெல்லுதல் முடியக் கூடியதே' என்று ஆசிரியர் இங்கே ஆதரித்துக் கூறுகின்ருர். வன்மையை மென்மையே வெல்லும் என்பது அவர் உறுதி!

—:○●○:—

*அறத்திற்கே அன்புசார்பு என்ப, அறியார்;*
*மறத்திற்கும் அஃதே துணை.*

அன்பு அறத்திற்கே சார்பு என்ப—அற உணர்வு பெருகுவதற்கே அன்பு துணையாகும் என்று சிலர் சொல்லுவர், அவர் அறியார்—மறத்திற்கும் அஃதே துணை—தீயவை குறைவதற்கும் அன்பே துணையாவது!

நாட்டில் நன்மைப் பெருக்கமும், தீமைக் குறைப்பும் வேண்டும். இரண்டிற்கும் அன்பே துணையென்பது இங்கே அறிவுறுத்தப் பட்டது. மறம் என்ற விடத்து அது தீயது ஆதலின் தீமைக் குறைப்புக்கும் என உரை விரிக்கப்பட்டது. "துன்பத்திற்கு யாரே துணையாவார்" என்புழிப் போல.

சார்பு என்பதும் துணை என்பதும் ஒருபொருளில் வந்தன. ஏகாரங்கள் முறையே பிரிநிலையும் தேற்றமும் ஆம்.

'அறியார்' என்று இகழ்ந்து ஒதுக்கினர், வன்பினும் ஒறுப்பினும் தீமையைக் குறைப்பதை விட, அன்பினல் உதவியால் அதனைக் குறைப்பதே எளிது என்றற்கு!

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**5-ம் ஆண்டுக் கையொப்பம்**

**(3-10-52 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள் — | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம் P. O.

(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| கிளை | நந்தன, பங்குனி, | தளிர் |
|---|---|---|
| 5 | 20-3-53 வெள்ளி | 25 |


# குருகுல ஆசிரியரின் உண்ணா நோன்பு

தமிழர்க்கு உணர்ச்சியும் சொல் வன்மையும் போதிய அளவு உண்டு. அவர்கள் தணிந்திருக்கின்றனர். அதனால், தமிழர் நிலை பொய்யுடையதைப் போல வேற்றவரால் வெளியோர்க்கு எடுத்துக்காட்டப் படுகின்றது. அதோடு, தமிழர்களின் நிலப் பரப்பு, மொழிச் சிறப்பு, கலை உயர்வு, அருட்டுறைகளின் அருமை ஆகியவற்றின் உண்மைகளும் விளங்கவில்லை.

தமிழக நிலப் பரப்பில் அண்டை அயலாரின் நெருக்கம் மிகுந்துவிட்டது. எல்லைத் தகராறுகள் பெருகி வருகின்றன. தமிழர்கள் மொழியுணர்ச்சி இன்றி வேற்றவரின் வசதியைக் கருதி அவரவர் மொழிகளில் பேசி அவர்களை இனிமைப் படுத்தி, தம் இல்லங்களில் வாழ்வதைப் போல வாழ வைத்தது, தமிழ் நிலப் பரப்புக்கே தீமையாக மாறிவிட்டது. வேற்று மொழியில் பேச விரும்புவதில் தமிழர்களைப் போல வேறு இனத்தவர் எவரும் இல்லை என்னும் கூறப்படுகிறது. வேற்று மொழி யாதிக்கம் தமிழகத்தில் எப்பொழுது வேர்விடலாம் என்று செவ்வி பார்க்கிறது. மங்கிய தமிழ்க்கலையை மாய்க்கத் தமிழகத்தின் அகத்தும் புறத்தும் வேற்றவரின் தீச் செயல்கள் தொடங்கின.

இறையருளால் வினையினீங்கி விளங்கிய அறிவைக் கொண்டு தமிழ்ச் சான்றோர்கள் கண்டு பிடித்துதவிய அரிய சமய உண்மைகளையும் அறிய விடுவதில்லை.

தமிழர்கள் விழிப்படைந்தாலன்றி இத் தாக்குதல்களை வெற்றியுடன் எதிர்ப்பது அரிது. இன்றுள்ள உணர்ச்சி குறைந்த நிலை நீடிக்குமானால் சின்னாட்களில் தமிழகத்தின் உருவே மாறிவிடக் கூடும். இந்த இடுக்கணான நிலையில் தமிழகத்தைக் காக்கக் கூடியவர் தவச்சான்றோர்களே. அவர்கள் உணர்ச்சி பெற்றுச் செயலாற்றுவதே தமிழர் தம் நிலையையும் உரிமைகளையும் காத்துக்கொள்ளச் செய்யத்தக்கதாகும்.

தவச்சான்றோரும் கடமையுணர்ச்சி மிக்கவருமான நம் குருகுல ஆசிரியர் தமிழகத்தின் நிலையைத் தாம் நடத்திவரும் வகுப்புகளிலும் கூட்டங்களிலும் உணர்ச்சி ததும்பக் கூறியிருக்கின்றனர். நாட்டில் விழிப்புநிலை நிரம்பத் தேவையுளது.

தமிழகம் விழிப்படையும் பொருட்டு, தம் வாக்குக்கு அடுத்தபடி, தாமே ஓர் உண்ணா நோன்பினை 7-3-53 இருந்து 10-3-53 வரை மேற்கொண்டார்கள். உண்ணாநோன்பு மக்களின் உணர்ச்சியைக் கிளறி, விழிப்பூட்டிச் செயலாற்றுவிக்கும். தவத்தால் அவர் இன்றுள்ள இடுக்கணான நிலையைக் கடக்கத் தக்க வழிகளை உள்ளுணர்ச்சி வாயிலாக உணர்வார். அவர் காணும் பாதையில் செல்வதே தமிழர்களின் கடமை.

உரிமையை, காந்தியடிகள் அவ்வப்போது உண்ணாநோன்பிருந்து, புதிய அன்புப் பாதைகளைக் கண்டு உதவிய முறை, இந்தியத் தலைவர்க்கும் மக்கட்கும் எவ்வாறு உதவிற்றென்பதை நாம் அறிவோம். அவ்வாறே ஆசிரியர் உண்ணா நோன்புடன் தவமிருந்து வழிகாட்டி உதவுவதைத் தமிழகம் பயன்படுத்திக்கொண்டு, விழிப்படைந்து, சொல் வன்மைக்கும் ஆரவாரத்திற்கும் மயங்காமல், தளராமல் தனக்குரிய சிறப்பு நிலையை அடைவதாக!

—மெய்கண்டான்.

# பணித் துறை

## ஆசிரியரின் நோன்பு

(வரலாறும், காணப்பட்ட நற்குறிகளும், பயனும்:)

ஆசிரியர் 7-3-53 முதல் 10-3-53 வரை மேற்கொண்ட உண்ணா நோன்பும் தவமும், முன் அறிவிப்பில்லாதன. திடுமெனத் தம் உள்ளத்தே தோன்றியதைக் 'கடமைதான், ஏதேனும் செய்ய வேண்டியதுதான்' என்கின்ற முறையில் எண்ணி முடிவு செய்து மேற்கொள்ளப்பட்டவை. என்றாலும் அவைகள் மிகவும் சிறப்பான முறையில் முடிந்திருக்கின்றன. சற்றும் எதிர்பாராத சில நன்னிகழ்ச்சிகள் அவற்றினிடையில் நேர்ந்து மகிழ்வூட்டி இருக்கின்றன.

7-3-53 சனியன்று பிற்பகல் 5 மணிக்கு, ஆசிரியர் நோன்பை முன்னிட்டுச், சிவனடியார் திருக்கூட்ட மண்டபத்தில் அன்பர் சிலர் கூடி வழிபாடும் பாராயணமும் செய்தனர். வழக்கம்போல் 6½ மணிக்குச் சென்னைக் கந்த கோட்ட மெத்தை மண்டபத்தில் ஆசிரியரின் அருட்பெருஞ் சோதி அகவல் விரிவுரை சிறப்பாக நடைபெற்றது. 8 மணிக்கு மேல், விரிவுரைக்கு வந்திருந்த அன்பர் திரள் தொடர்ந்து வர, ஆசிரியர் கந்த கோட்டத்திற்குச் சென்று, அக் கோயில் அறக்காவலர்கள் உடனிருந்து வழிபாடு செய்விக்க அருச்சனை முதலியன செய்துகொண்டு, தென்முகத் தெய்வத்தின் (தட்சிணா மூர்த்தி) திருமுன்னர், நோன்பை மேற்கொண்டார்கள்.

மறுநாள் 8-3-53 ஞாயிறன்று காலை முதல் செவ்வாய் மாலை வரை குருகுலத்தைச் சேர்ந்த அன்பர்களும் பொது மக்களும் தக்கோர்களும் திருக்கூட்ட மண்டபத்திற்குச் சிலரும் பலருமாக அடிக்கடி வருவதும், அமைதியாக இருந்து வழிபடுவதும், திரு நெறிப் பாடல்களை ஓதுவதும், அங்கேயே இருந்து தத்தம் நிலைக்கேற்ப நோன்பு மேற்கொள்ளுவதுமாக இருந்தனர். திருக்கூட்ட மண்டபமே தவச் சாலையெனக் காட்சி தந்தது.

ஆசிரியர் குறிப்பறிந்து, அன்பர் பலர் (தாய்மார்கள் உட்பட) அங்கே நந்தா விளக்குகள் (விடாமல் சுடர்விட்டெரியும் அகண்டம் சிறிய அகல்கள் முதலியன), நறுமணம் வழங்கும் புகைப் பண்டங்கள், தோரணங்கள், வழிபாட்டுக்குரிய மலர் முதலிய மற்றப் பொருள்கள் தத்தம் அன்பில் தொகுத்துச் சேர்த்து நிறைவு செய்தார்கள்.

எண்ணங்களே உலகத்தை இயக்குவன என்றும், தவ நிலையில் எண்ணும் நேரிய நல்லெண்

### கனிந்த நன்றி

எங்கள் குருகுலத் தலைவர், தமிழகத்தின் நன்மைக்காக, 7-3-'53 முதல் மூன்று நாட்கள் உண்ணா நோன்பும் தவமும் இருந்தனர்.

அதுபோது தமிழ் அன்புள்ளோர் பலர் நேரில் வந்து கண்டும், கடிதங்கள் வாயிலாக உருக்கம் தெரிவித்தும், இதழ்கள் வாயிலாக வெளியீடு செய்தும், பேரன்பினர் பலர் உடனிருந்தும் தொலைவிலிருந்தும் நோன்பு செய்தும் போற்றினர்.

ஆசிரியர், அனைவர் திறத்தும் தமது பாராட்டுதலைக் கனிந்த நன்றியுடன் உருக்கமாய்த் தெரிவித்துக் கொள்கின்றனர்.

தமிழகம் பலவகையிலும் கிளர்ச்சியும் வளர்ச்சியும் பெற்றுச் சிறப்பதற்கு, இந் நோன்பு, இயக்கம் பெற்றிருக்கின்றது என்று நம்புகின்றோம். திருவருள் உதவுவதாக!

—குருகுலத்தார்.

ணங்கள் இயக்கங் கொண்டு நன்றாக நாட்டை இயக்கும் என்றும், ஆராய்ச்சி வல்ல ஆன்றோர்கள் கூறுகின்றதைப் பல்கால் கேட்டும் — படித்துமுள்ள அடியேனுக்கு, ஏதோ வொரு எண்ண இயக்கம் திருக்கூட்டத்தில் கால்கொண்டு விட்டது என்கிற உணர்ச்சியும், அங்கே முறுகி முறுகி எழுந்த நறுமணப் புகைபோல் அது நாடு முழுதும் இயங்கி வேலை செய்கிறது என்கிற நம்பிக்கையும் ஏற்பட்டன.

கடந்த 3- 3- 53 அன்று இரவு ஆசிரியரோடு திருக்கூட்ட மண்டபத்தில் தங்கிய போது தான் நோன்பு பற்றிய தம் முடிவை ஆசிரியர் தெரிவித்தார். இரவு 2 மணிவரை தமிழ் நாட்டின் தற்கால நிலைகளைப் பற்றியும் எண்ணி எண்ணிப் பேசி உருகிக்கொண்டிருந்தோம். அன்றுமுதல் 11-3-53 காலை 9–10 மணி வரையில் எளியேனின் நினைவும், சொல்லும், செயலும் பெரும்பாலும் நோன்பு பற்றியவாகவே இருந்தன. கிழமை முழுதுமே இயல்பாக நோன்பு முறையில் அமைந்து விட்டது. உணவு பற்றிய எண்ணமே சில நாட்களில் எழவில்லை. ஆசிரியரின் நோன்பு நாட்களில் நாம் மட்டும் உண்பதா? என்கிற உணர்ச்சியே எப்படியெல்லாமோ இயக்கி வீட்டை மறந்து, மற்றக் கடமைகளை மறந்து, பெரும்பாலும் திருக்கூட்டத்திலேயே இருந்து வருமாறு செய்துவிட்டது. விடுமுறை எடுக்க இயலாமையின் எப்படியோ இவற்றிற்கிடையில் அலுவலுக்கும் போய்க் கொண்டு தான் இருந்தேன்.

நிற்க, நோன்பின்போது ஆசிரியர் வாய் வாளாமை (பேசாமை) மேற்கொண்டிருந்தார்கள். ஆயினும், வழக்கம் போல் ஞாயிறு பிற்பகல் குருகுல மாணவர் வகுப்பையும், மாலை பெரிய புராண விரிவுரையையும், திங்கள் மாலை வாரவழிபாட்டையும் செவ்வாய் மாலை கந்தரநுபூதியையும் எதிர் பார்த்ததற்கு மேல் சிறப்பாகவே நடத்தி முடித்தார்கள்.

திங்கள் மாலை அடியேன் அலுவலகத்திலிருந்து நேரே திருக்கூட்டத்தைச் சார்ந்த போது அங்கே ஏதோ திருமணம் நடப்பது போன்ற காட்சிகள் காணப்பட்டன. அன்பர்கள் பலராக ஈண்டியிருந்தனர்.

குருகுலத்தில் பிள்ளையார் கோயில் அமைத்திருப்பவரும், திருக்கழுக்குன்றப் பெருவிழாவில் வரலாற்று இயைபுபடி பன்னிரு திருமுறைக்கும் பிள்ளையாருக்கும் வழிபாடு செய்வித்துச் சிறப்பிப்பவருமாகிய திருவாளர் வேதாசலம் செட்டியார் (நைனியப்பன் தெரு, சென்னை 3) அவர்கள், மாணிக்கவாசகர் திருவுருவம் (செப்பு) ஒன்றை எங்கோ ஒரு திருக்கோயிலுக்கு என அமைத்தாராம். அதை அங்கே சேர்க்க ஏதோ தடை நேர்ந்து விட்டதாம். எனவே மாணிக்கவாசகர்பால் மிக்க ஈடுபாடுடையவரும் அவரைப் போன்ற வாழ்க்கையையே மேற்கொண்டவருமான எங்கள் ஆசிரியரிடம் அதை ஒப்படைத்து விடுவதே தக்கது எனத் தேர்ந்தனர். தேர்ந்தபடி முன் அறிவிப்பில்லாமலே நடு நாள் நோன்பன்று மாலை திருக்கூட்ட இடத்தில் மணிவாசகரை எழுந்தருளச் செய்து ஆதிசைவ அந்தணர் ஒருவரைக் கொண்டு முறைப்படி திருமுழுக்கு (அபிஷேகம்) முதலியன செய்து, வந்திருந்த அன்பர்களுக்கெல்லாம் சந்தனம் பன்னீர் வெற்றிலை பழம் சர்க்கரை கலந்த தேங்காய் நறுக்குகள் முதலியன வழங்கி ஆசிரியரிடம் ஒப்படைத்தார்கள்.

வழக்கம் போல் நடைபெறும் திருக்கூட்ட வார வழிபாடு இம்மங்கல நிகழ்ச்சியால் மிகவும் சிறப்புற்றது. அதனிடையில் நிகழ்ந்த ஆசிரியரின் பேச்சில் அன்று நோன்பு நிலையினதும்,

நஞ்சன்கூடு பல்பொடி

பாக்டெரியாரின்




யுனைடெட் கன்ஸர்ன்,

54; பந்தர்த் தெரு, :: சென்னை-1

இச் சிறப்பு நிகழ்ச்சியால் நேர்ந்த மகிழ்ச்சி உருக்கம் முதலிய தன்மைகளாலும் திருவாசகம் பற்றிய அரிய பல உண்மைகள் வெளிப்பட்டன. (இவ் உண்மைகள் பின்பு இதழில் வரும்)

சங்க காலத்துக்குப்பின் நிலைகெட்ட தமிழகத்தினை ஓர் ஒழுங்கில் நிறுத்தி, சமய உணர்ச்சியை நாட்டோடு பிணைத்து, மொழி நடையில் பழமை தழுவிய புதுமைகளை வகுத்து, தென்னாட்டு நாகரிகம் 'கோயில் நாகரிகம்' என்று இன்று கொள்ளத் தக்க நிலைகளுக்கெல்லாம் அடிப்படை அமைத்த முதலாசிரியரான மாணிக்கவாசகரையே, தமிழகத்தின் நலன்களுக்காக நோன்பிருக்கும் ஓர் ஆசிரியர்பால் கொண்டு வந்து சேர்க்கிற முறையில் அமைந்த இந்நிகழ்ச்சி எளியேனுக்கு மிக்க உணர்ச்சியையும் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் ஊட்டியது.

அதோடு திருவாளர் எழுமலை செட்டியார் (தேவராச முதலி தெரு, சென்னை) என்னும் பேரன்பர், ஆசிரியருக்கு வடவேங்கடவனின் திருவுருவப் படமும், வருகின்ற அன்பர்களுக்கென்று நூற்றுக் கணக்கில் வாழை எலுமிச்சம் பழங்களையும் அனுப்பியிருந்தது இன்னும் நற்குறியாக இருந்தது. திரு. முத்துசாமி அய்யர் அவர்கள் ஆசிரியருக்குச் சிறந்த கதர் ஆடைகள் வழங்கினர்.

நோன்பினிடையில் திருவேங்கடமுடையான் திருவுருவம் எதிர்பாராது கிடைத்தமையின், தக்கபடி முயன்றால் தமிழர் தமக்குரிய வடபகுதிகளைப் பெறலாம் என்கிற நம்பிக்கை அரும்பியது.

10-3-53 அன்று முழுவதும் குருகுல அன்பர் திரு. பி. வி. குப்புசாமி அவர்களால் திருக்கூட்ட மண்டபத்தில் சிறப்பான முறையில் வழிபாடுகளும் பாராயணங்களும் அமைந்தன. திரு. வேதாசலம் முதலிய நல்லன்பர்கள் சிலரின் ஈடுபாட்டால் அன்று எதிர்பாரா நிலையில் மாணிக்கவாசகர்க்கு ஊசல் விழா ஒன்றும் சிறப்பாக அமைந்தது. ஆசிரியர்க்கும், அன்று கந்தரநுபூதி விரிவுரைக்கு வந்த அன்பர்கட்கும் இந்நிகழ்ச்சிகள் மிக்க வியப்பையும் ஈடுபாட்டையும் மகிழ்ச்சியையும் உண்டாக்கின.

இரவு 9 மணிக்குமேல் ஊசலுக்குப் பின் ஆசிரியர் தமது நோன்பை, சிறிது பாலருந்தி இனிது முடித்தார்.

நோன்புக்கு இடையில் பலர் தக்கவர்கள் வந்து ஆசிரியரைக் கண்டு சென்றனர். அவருள் சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, திருக்குறட் சொல்லடைவு ஆசிரியர் திரு சாமி வேலாயுதம் பிள்ளை முதலியோர் ஆசிரியர் விரிவுரைகளிலும் கலந்து கொண்டனர். நோன்பு முறையைப் போற்றி அறிஞர் சிலர் கடிதங்கள் எழுதியிருந்தனர். தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. மயிலை சிவமுத்து அவர்களும் அந் நாட்களில் இயன்ற பெற்றி நோன்பிருக்கப் போவதாக அறிவித்திருந்தார்கள்.

விளம்பரத்தை விரும்பாவிட்டாலும், செய்தது பெரிதாக அமையாவிட்டாலும், தமிழகத்தின் தக்கோர், அரசியல் தலைவர், அறிஞர் பலர் ஆசிரியரின் நோன்பை அறிந்தே இருந்தனர். நோன்பின் வழி உணர்வு நன்றாக இயங்கியிருக்கிறது.

மத்திய அரசாங்கத்தின் இறுதி முடிவுகளுக்கும் பின்னைய நிகழ்ச்சிகளுக்கும் உற்ற பல செயல்கள் நோன்பின் பயனாய் இனிதே உருக்கொள்ளும் என்கிற நம்பிக்கை பெரிய அளவில் உடனிருந்தோர் அனைவர்க்கும் தோற்றியிருக்கிறது.

:—O—:

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குதெரு சென்னை 1.

# மொழித் துறை

## தமிழகம் பெறவேண்டிய நலங்கள்

1. வட வேங்கடம் தென் குமரி இடைப்பட்ட தமிழ் கூறு நல்லுலகம் தனி மாகாணமாக அமைதல் வேண்டும்.

2. அமையும் தமிழகத்தில் தமிழ், அரசு மொழியாக இருத்தல் வேண்டும்.

3. உட் செயல்களில் மாகாண ஆட்சிக்கு எல்லா உரிமையும், வெளி நாடு போக்குவரவு அஞ்சல் பாதுகாப்பு முதலிய நிலைகளில் இந்தியக் கூட்டுரிமையும் இருக்கவேண்டும்.

4. தமிழ் மொழி வல்ல 'புலவர் பேரவை' ஒன்றை அரசாங்கத்தின் சார்பில் நிறுவித் தமிழ் மொழியின் வளத்தை நன்கு பயன்படுத்திக் கொள்வதோடு உலகமும் அறியுமாறு செய்ய வேண்டும்.

5. நாட்டு மக்களின் கல்வி பண்பு, கலை நாகரிகங்களைப் பற்றிய செயல்களில் புலவர் பேரவையின் அறிவு அறவுரைகளைக் கேட்டு அரசாங்கம் இயங்க வேண்டும்.

6. தமிழ்ப் புலவர்களை அரசியல் நடுவர்களாகவே மதித்து, அரசாங்கத்தின் சார்பில் அவ்வப்போது நிறுவும் பற்பல ஆராய்ச்சிக் குழு உசாக் குழு முதலியவைகளில் அவர்களைத் தகுதியான முறையில் இணைத்துப் பயன்படுத்த வேண்டும். ஆட்சியின் உயர்பதவிகளில் தமில்வல்ல தக்கோர்களையே வைக்க வேண்டும்.

7. உலகப் பொதுமறையாகவும், தமிழகச் சிறப்பு மறையாகவும் இலகும் திருக்குறளை அடிப்படையாகக் கொண்டே அரசியல் ஒழுங்கு முறைச் சட்டங்களும், நாட்டு மக்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் அமைதற்கான சூழ் நிலைகளை அரசாங்கத்தின் சார்பில் உண்டாக்கவேண்டும்.

8. அரசாங்கத்தின் சார்பிலேயே தமிழ் முன்னூல்களை உலகச் சிறப்பு மொழிகளில் மொழி பெயர்த்துப் பரப்பவும் பிற மொழி நன்னூல்களைத் தமிழில் கொண்டு வந்து சேர்க்கவும் முயற்சிகள் நடைபெறவேண்டும்.

9. மொழி, சமயம், வரலாறு, கல்வெட்டு, புதை பொருள் ஆராய்ச்சிக் குழு ஒன்றை அமைத்து அதன் வழி தமிழகத்தின் முன் பின் வரலாறுகளை முறைப் படுத்தி எழுதுவிக்க வேண்டும்.

10. மக்களுக்கு உணவு உடை உறையுள் முதலியன குறையின்றி அமையுமாறு செய்வதே அரசாங்கத்தின் கடமை என்று எண்ணிவிடாமல், அவைகளை நல்குவதை அடிப்படைக் கடமையாகக் கொண்டு, அதற்கு மேல் மக்களுக்கு "நன்னடை நல்குதலே" அரசாங்கத்தின் தலையாய கடமை என உணர்ந்து அதற்காக நாடெங்கும் தக்கவர்கள் தலைமையில் குருகுலங்கள் அமையவும் அமைக்கவும், இருக்கின்றவைகளுக்கு ஆக்கம் செய்யவும் வேண்டும். இவ்வகையில் ஆங்காங்குள்ள பற்பல சமய அமைப்புகளும், தத்தம் வரம்பில் மக்களுக்கு நன்கு பயன்படும் முறைகளில் நடைபெறுமாறு திருத்தங்கள் செய்து, பார்த்துக் கொள்ள வேண்டிய கடமையும் சேரும்.

அடிப்படையான இத்தகு நலங்கள் தமிழ் மாகாணத்துக்கு அமைந்தால், அவ்வம்மொழி மாகாணத்துக்கும் முறைப்படி இன்னும் மேன்மேல் அமைய வேண்டிய பல நலங்கள் இயல்பாக அமைந்து கொண்டே போகும். இந்தியக் கூட்டாட்சியும் வலிவுற்று நாளும் சிறக்கும்.

— ஒளியகம்.

—:○●○:—

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

# கலைத் துறை

## நாட்டுப் புலவர் நன்மொழிகள்

[தேசியக் கவி பாரதியாரை இப்போது நாடெங்கும் பலர் பெருமையாகப் போற்றுகிறார்கள். ஆனால் தமிழ் நாட்டைப் பற்றியும் மொழியைப் பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை உண்மையாகத் தழுவிய, ஒழுங்கான ஆக்கச் செயல்கள் எங்கும் நன்கு நடைபெறக் காணோம். ஆசிரியர் நோன்புடன் ஒருபுடை இயைபுடைய சில பாரதி மொழிகள் இங்கே நினைவூட்டப்படுகின்றன. அன்பர்கள் ஒவ்வொருவரும் இம்மொழிகளுக்கேற்ற ஆக்கச் செயல்களை இயன்றவரை கடமையாக மேற்கொண்டால் தமிழகம் விரைவில் பல நற்றகுதிகளைப் பெறும் என்பது உறுதலை.]

பாரதியார் வாழ்த்துகிறார்:

"......வாழ்க தமிழ் மொழி!
வாழ்க தமிழ் மொழி!!
வாழ்க தமிழ் மொழியே!!!...
......வானமளந்த தனைத்து மளந்திடு
வண்மொழி வாழியவே!...
......வானமறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே!...
......ஏழ்கடல் வைப்பினும்
தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!...
சூழ்கலி நீங்கத்
தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!"

பாரதியார் வருந்துகிறார்:

(தமிழ்த்தாய் நிலையில் இருந்து)

"இன்றொரு சொல்லினைக்
கேட்டேன்—இனி
ஏது செய்வேன்? எனதாருயிர்
மக்காள்?

கொன்றிடல் போலொரு
வார்த்தை—இங்குக்
கூறத் தகாதவன்
கூறினன் கண்டீர்!
புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின்
நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள்
தமிழினில் இல்லை.
சொல்லவுங் கூடுவ தில்லை—அவை
சொல்லுந் திறமை
தமிழ் மொழிக் கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள்
புவிமிசை யோங்கும்.
என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!
இந்த வசைஎனக்
கெய்திட லாமோ!
சென்றிடு வீரெட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும்
கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்!
தந்தை அருள்வலி யாலும்—இன்று
சார்ந்த புலவர்
தவ வலியாலும்
இந்தப் பெரும்பழி தீரும்—புகழ்
ஏறிப் புவிமிசை
என்று மிருப்பேன்".

பாரதியார் கட்டளையிடுகிறார்:

"தேமதுரத் தமிழோசை
உலகமெலாம் பரவும்வகை
செய்தல் வேண்டும்!
சேமமுற வேண்டுமெனில்
தெருவெல்லாம்
தமிழ் முழக்கம்
செழிக்கச் செய்வீர்!

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற்
பெயர்த்தல் வேண்டும்;

இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்..."

பாரதியார் அறிவுறுத்துகிறார்:

**குழந்தைகட்கு:**

"தமிழ்த்திரு நாடு
தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா!
அமிழ்தில் இனியதடி பாப்பா......"

**அன்பர்கட்கு:**

"செந்தமிழ் நாடென்னும்
போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது
காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற
பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"

**அரசியலார்க்கு:**

"நீலத் திரைக்கடல்
ஓரத்திலே—நின்று
நித்தம் தவம்செய்யும்
குமரி எல்லை—வட

மாலவன் குன்றம்
இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும்
தமிழ் நாடு!"

**உலகத்தார்க்கு:**

"யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்

யாமறிந்த புலவரிலே
கம்பனைப்போல் வள்ளுவர்போல்
இளங்கோ வைப்போல்

பூமிதனில் யாங்கணுமே
கண்டதில்லை உண்மைவெறும்
புகழ்ச்சி யில்லை."

—தமிழ்ச் சிறுவன்.

# குருகுலச் செய்தி

## யாம் கண்ட நல்லோர்

(முன் தொடர்ச்சி)

**திருவாசக விழாவில்:**

அன்று மாலை 5-மணிக்குத் திருவேகம்பர் திருக்கோயிலில், மெய்கண்டார் கழகத்தின் சார்பில், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் சிவத்திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகளின் திருவுளப்படியும், ஆதரவுபடியும் திருவாசக விழா நடைபெற இருப்பதறிந்து, அதற்குப் போகவேண்டும் என்ற ஆர்வத்தினால் நாங்கள் திருமேற்றளி வழிபாட்டை முடித்துக் கொண்டபின் ஓரளவு விரைவாகவே திரும்பினோம். எனினும், மாலை 7-மணிக்குத்தான் எங்களால் ஏகம்பர் கோயிலை அடைய முடிந்தது. ஆனால் எக் காரணத்தாலோ அப்போதுதான் கூட்டமும் தொடங்க இருந்ததைக் கண்டு மிகவும் மகிழ்ந்தோம்.

காஞ்சிபுரத்தில் மெய்கண்டார் கழகம் திருவருள் நெறியில் மக்களைப் பல ஆண்டுகளாகப் பழக்கிவரும் நல்ல அமைப்பு! அதனைப் பெருமுயற்சியுடன் நடத்தி வருபவர், தோற்றத்தாலும் ஏற்றத்தாலும் சிவகணத் தலைவர் போன்றிலகும் சைவத் திருவாளர் வித்வான். திருஞானசம்பந்த முதலியார் அவர்களாவர்! அவர்களுக்குத் துணையாக இருக்கும் அறிஞர்கள் திரு. க. வச்சிரவேலு முதலியார் B. A., L. T. அவர்களும் வித்துவான் சி. அருணைவடிவேலரும் பொன். குமாரசாமி அடிகளார் போன்றோர் பலர் ஆவர்.

நாங்கள் சென்றபோது சித்தாந்தப் பேராசிரியர் க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்திக்கொண்டிருந்தார்கள். குன்றக்குடி அடிகளாரின் அரிய குணங்களையும், இக்கால நிலையினை அறிந்து செந்தமிழ்ச் சிவநெறிப் பற்றுடைய இளைஞர்கள் அறிஞர்களின் உள்ளம் மகிழும் வகையில் மற்றப் பெரு மடங்களுக்கெல்லாம் வழிகாட்டு முறையில் அவர்கள் செய்து வரும் அரிய பெரிய பணிகளையும் எடுத்துச் சொல்லி எம்மனைய இளைஞர்க்கு மகிழ்ச்சியூட்டினார்கள்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் திரு. எம். சண்முகசுந்தர முதலியார் அவர்களின் தலைமையில், வித்துவான்கள் திரு. சி. அருணைவடிவேலரும், திரு. வீ. திருஞான சம்பந்தரும் பேசத் திருவாசக விழா இரவு 9 மணியளவில் முடிந்தது. மேற்குறிப்பிட்ட அறிஞர்களுடனும் மற்றும் சில அன்பர்களிடமும் சிறிது நேரம் அளவளாவிப் பிரிந்து அவரவர்க்கு வேண்டியபடி விடுதியில் உணவும் சிற்றுண்டியும் கொண்டு தேவாரப் பாடசாலையில் இரவை இனிது கழித்தோம்.

**திருவன்பார்த்தான் பனங்காட்டூரில்: (24-6-52)**

ஜூன் இருபத்து நான்காம் நாள் காலையில் எழுந்ததும் முன்னாளிரவு திரு. கதிர்வேலரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டபடி உந்து வண்டி நிலையத்திற்குச் சென்று எங்களை முதலில் தூசிவரை கொண்டு போய்விடவும், பிறகு அங்கிருந்து திருவத்திபுரம் அழைத்துப் போகவும் வண்டி பேசிக் கொண்டோம்.

தூசியிலிருந்து கிழக்கே ஒரு கல் தொலைவு நடந்தால் திருக்குரங்கணின் முட்டத்தை அடையலாம். அவ்வூர் குரங்கும் அணிலும் முட்டம் என்னும் காகமும் வழிபட்ட இடமாதலின், அப் பெயர் பெற்றதாம். வாலி பூசித்ததால் அவ்வூர் இறைவன் வாலீசுரர் எனப்படுகின்றார்.

முன்னோர் போற்றிய இடங்களை நாம் எவ்வளவு தூரம் புறக்கணித்து வருகின்றோம் என்பதைக் குரங்கணின்முட்டத் திருக்கோயிலைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். சிறிய கோயில். வெளிப் பார்வைக்கு நன்றாய் இருப்பதுபோல் இருக்கிறது. உள்ளே திருச்சுற்றுகள் எல்லாம் மேடும் பள்ளமும் நிறைந்து பெருச்சாளிகளின் நடமாட்டத்துக்கு உட்பட்டுக் கிடக்கின்றன. அக்கோயில் குருக்கள் அவ்விடங்களில் எல்லாம் சுள்ளிகளையும், விறகு, சாணி முதலியவைகளையும் அடைத்து வலம் வர முடியாதபடி வைத்திருக்கிறார்.

(வரும்)

பதிந்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்: மதுராந்தகம் (அஞ்.)